# பரலோக பொக்கிஷங்கள்

மேலானவைகளையே நாடுங்கள்! (கொலோசெயர் 3:2)



## 'கிறிஸ்து' தேவன் நமக்கு அருளிய மாபெரும் ஈவு!

கிறிஸ்து நமக்கு அருளப்பட்டார்! அந்த மாபெரும் தெய்வ ஈவை "பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்க காண்பீர்கள்!" இதுவே இன்றும் நமக்கு அடையாளம்! (லூக். 2:12). இது நமது மாறாத அடையாளமாய் இருப்பது, இந்த பூமி வாழ்விற்கு போதும்! இனி, தூதன் முழங்கிய 1)தேவ நாமம் நம்மூலம் மகிமைப்படும் 2) பூமியில் நம் குடும்பத்தில் சமாதானம் தங்கும் 3) எந்த மனுஷரிடத்திலும் அன்பு நிலைத்தோங்கிடும்! (லூக்கா 2:12-14).

நம் மூலமாய் கிறிஸ்துவின் புகழ் ஓங்குக! *-tr*



## பலன் தரும் கிறிஸ்தவ ஜீவியமே பாக்கியம்!

**பா**வம் வஞ்சகமாயிருப்பதுபோலவே, மன்னிப்பு கேட்டுக் கொண்டால் போதும் என்பதும் வஞ்சகமே! பிள்ளை விஷத்தை விழுங்கிவிடும்போது, மன்னித்தால் பிழைத்துக் கொள்வானோ? அவன் அதை வாந்தி பண்ண வேண்டுமே! பாவ ஜீவியத்தை என்னால் முற்றிலும் விட்டுவிட முடியுமோ? என்று கேட்கிறோம். இந்தக் கேள்வியே தவறானது!

பாவத்தை விட்டுவிடுவதும், பரிசுத்தமாய் நடப்பதும் நம்மால் ஆகிற காரியமல்ல! கர்த்தர் நம்மில் செய்யவேண்டிய வேலையை நாம் செய்யப் பார்ப்பது பிசகு. கிறிஸ்துவின் கையில் உங்களை விட்டுவிடுங்கள். உங்கள் பாவங்களை மன்னிப்பவர் அவர். உங்களைக் கழுவுகிறவர் அவர். உங்கள் இருதயத்தை மாற்றுகிறவர் அவர். உங்களுக்குள் தமது ஆவியை வைத்து உங்களை மறுரூபமாக்குகிறவர் அவர். உங்களைப் பலப்படுத்திப் பாவத்தின்மேல் வெற்றி கொடுப்பவர் அவர்! நற்கனிகளினால் உங்கள் ஜீவியத்தை அலங்கரித்து பிறருக்கு உங்களை ஆசீர்வாதமாக்குகிறவர் அவர்! அவரே உங்களை முற்றிலும் ஆண்டுகொள்ள இடங்கொடுங்கள். அவர் உங்களுக்குள் வசிக்கட்டும். அவர் உங்களுக்குள் போதிக்கட்டும். அவரே உங்களை நடத்தட்டும். அவரே உங்களைக் காக்கட்டும். அவரே உங்களை உபயோகிக்கட்டும். அவரே உங்கள் மகிமையாக விளங்கட்டும்! இது, எவ்வளவு பாக்கியமான ஜீவியம்! *-Ed*

**2026 'பரலோக பொக்கிஷங்கள்'**

வருட சந்தா **ரூ.170**/- தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு டிசம்பர் 20-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். நன்றி!

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A-Zaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall mcf

## ‘பெத்லகேமில்’ நமக்காக அழுது, பிறந்த பாலகன்!

*‘அவர் வந்திருக்காவிட்டால்’ நம் கதி என்ன? சிந்தியுங்கள்*

“கிறிஸ்து இந்த பூமிக்கு வந்திராவிட்டால்!” என்ற தலைப்பில் ஒரு கிறிஸ்துமஸ் வாழ்த்து மடல் சில வருடங்களுக்கு முன்பு வெளியிடப்பட்டது. ஒரு சபை போதகர், கிறிஸ்துமஸ் பற்றிய ஒரு கனவில் ‘*கிறிஸ்து இந்த பூமிக்கு வந்திராவிட்டால்*’ என்ற உணர்வை வைத்து கனவு கண்டார். நம் இரட்சகர் இயேசுகூட ஒருமுறை பரிசேயரிடம் கூறியபோது “நான் உங்களிடத்தில் வந்திராவிட்டால்” எனக்கூறி உணர்த்தினார்!

*அந்த போதகர் கிறிஸ்துமஸ் தினத்தை முன்வைத்தே அந்தக் கனவை கண்டார்: தன் வீடு முழுவதும் அங்கும் மிங்கும் ஓடி கிறிஸ்துமஸ் மணி தொங்குகிறதா? அலங்கார தோரணங்கள் போடப்பட்டுள்ளதா? கிறிஸ்து பிறப்பின் நட்சத்திரங்கள் வீட்டில் மின்னுகிறதா? என்றெல்லாம் தேடிப் பார்த்து, தன் வீட்டில் இவைகளில் யாதொன்றும் இல்லாததைக் கண்டு, வீதிக்குச் சென்று தேடினார். வீதியில் பரலோகத்தை சுட்டிக் காட்டும் ஆலய கோபுரம் இல்லை! அங்குள்ள நூலகத்திற்குச் சென்று தேடிப் பார்த்தால் ‘இரட்சகரை குறித்த புத்தகங்கள்’ ஒன்றுகூட இல்லாமல் மறைந்து விட்டன!*

கதவை யாரோ தட்டியவுடன் அங்கே நின்ற பக்கத்து வீட்டு சிறிய மகள் “தயவு செய்து, மரித்துக்கொண்டிருக்கும் என் அம்மாவிற்காக ஜெபம் பண்ண வாருங்கள்” என்று அழைத்தாள். அந்த சுகவீன அம்மாவின் குடும்பத்தை ஆற்றித் தேற்றுவதற்காக வேதப்புத்தகத்துடன் அவர்கள் வீட்டிற்குச் சென்றேன். அங்கே உட்கார்ந்து “உங்கள் ஆத்துமாவுக்கு ஆறுதலாய் இரட்சகர் கூறிய வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்” எனக் கூறி, வேதத்தை திறந்து பார்த்தால், அது மல்கியா புத்தகத்தோடு முடிவடைந்திருந்தது:

“**இரட்சகரின் புதிய ஏற்பாட்டு புத்தகம் காணோம். சொல்லுவதற்கு நற்செய்தி இல்லை! தேற்றுவதற்கு நம்பிக்கையான**

வாக்குதத்தங்கள் இல்லை! மனம் வெதும்பி அந்த வீட்டாரோடு அழ மாத்திரமே முடிந்தது!

*அடுத்த நாள், அந்த தாய் இறந்துவிட்டார்! அந்த அம்மாவின் பெட்டி அருகே நின்று துக்கித்தேன். அடக்க ஆராதனையை நான் தொடங்கியபோது "இயேசுவின் ஆறுதல் செய்தி கூற முடியவில்லை!* **மகிமையான உயிர்த்தெழுதலைப் பற்றி சொல்ல முடியவில்லை!** *திறந்த வானத்தை நோக்கிப் பார்க்கும் நம்பிக்கையும் இல்லை". ஆனால், "மண்ணுக்கு மண்ணும், சாம்பலுக்கு சாம்பலுமாயிருக்கிறாய்" என்ற நித்தியமான பிரிவை மாத்திரமே சொல்ல முடிந்தது. "இரட்சகர் வரவில்லையே" என்ற அழுகையோடு* **என் கனவு முடிந்தது.** *ஆ, இது ஆச்சரியம்! ஆலயத்திலிருந்து ஒலிபரப்பப்பட்ட கிறிஸ்து பிறப்பின் பாடலை கேட்டு, ஆனந்த மகிழ்ச்சி என்னிடம் திரும்பவும் வந்தடைந்தது:*

பக்தரே வாரும் ஆசை ஆவலோடு

நீர் பாரும், நீர் பாரும் இப்பாலனை!

வானோரின் ராஜன் கிறிஸ்து பிறந்தாரே

சாஷ்டாங்கம் செய்ய வாரும் இயேசுவை!

*உண்மைதான் "கிறிஸ்து பிறந்தார்" என்ற செய்தி அவருடைய பக்தர்களின் உள்ளத்தை நிச்சயமாய் கொள்ளைக்கொள்ளும்! பரவசப்படுத்தும்! அன்று தோன்றிய தேவ தூதன், ஜனங்கள் எல்லோரையும் நோக்கி: "மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். 'இன்று' கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் தாவீதின் ஊராகிய பெத்லகேமிலே பிறந்திருக்கிறார்!" (லூக்கா2:10,11) என அறிவித்தான்!*

*இந்த ஆசீர்வாதமான செய்தியை, சாபத்தில் வாழும் உங்களைச் சுற்றியுள்ள லோக மக்களுக்கு தெரிவிப்பீர்களா? உங்களைச் சுற்றியுள்ள புறமதஸ்தர்கள் மீதுகொண்ட அக்கறையை "கிறிஸ்துமஸ் தினம்" வலிமையாய் தூண்டுவதாக!* **சுவிசேஷத்தின் மதுரத்தை குடித்த நீங்கள்** *'ஒன்றுமில்லாதவர்களுக்கு' நீங்கள் பெற்ற நன்மையை, பங்கு வைத்து கொடுங்கள்! (நெகே.8:10). அன்று எருசலேமின் 'அலங்கம் இடிபட்டுக் கிடந்ததை' நெகேமியா கண்டதைப்போலவே, இன்றும் 'சுவிசேஷ ஊழியம்' அனேகரிடத்தில் இல்லாமல் போய்விட்டது! அலங்கம் செப்பனிடுங்கள்! 'கிறிஸ்து பிறந்தார்' என்ற சேதியை திக்கெட்டும் அறிவியுங்கள்! ஆமென்.*

*- Mrs.சார்லஸ் கஃப்மென்*

## தேவ பிரமாணங்களை ஒதுக்கிடும் பரிசேயத்துவ காலமிது!

*துன்மார்க்கத்திற்கு 'சுயாதீனம்' கூறுவது தவறு*

*நாகரீக சுக வாழ்வை எட்டிவிட்ட இன்றைய உலகில், கிறிஸ்தவ ஜனங்களும் அதில் ஈர்க்கப்படுவது மாபெரும் கொடுமை! இவர்களின் நோக்கம் நிறைவேறிட கையாளும் உத்தி என்ன தெரியுமா? முன்பு எவைகளையெல்லாம் "நியாயபூர்வமற்றது" என வைத்திருந்தார்களோ, அவைகளை "நியாயபூர்வமாய்" மாற்றிடத் துணிந்துவிட்டார்கள்!*

> "**தாங்கள் சுயமாய் செல்லும் வழியை அடைத்து நிற்கும் சத்தியங்களைப் "பிழையென" அறிவித்து, தங்கள் சுய விருப்பங்களை நிறைவேற்றத் துடிக்கும் கொடிய காலம் இது!**

*கட்டளையின் 6-வது பிரமாணமான "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக!" என்ற முக்கிய பிரமாணம்கூட இன்று தேய்வடைந்து, "அது எல்லாம், பழைய காலம் என மழுப்பி..... நாகரீக வளர்ச்சி என்ற தூண்டிலைக் கடித்து" தங்கள் இச்சைகளை நிறைவேற்றும் புதிய கலாச்சாரம் கிறிஸ்தவத்தில் நுழைந்துவிட்டது! இதன் விளைவாய் இன்று தாண்டவமாடும் சோகம்தான் "***விவாகரத்து – மறுமணம்***" என்ற விபச்சாரம்! அதையும், ஆலயத்தில் வைத்தே செய்து முடிக்கும் துணிகரம்!*

*வயதிற்கு வராத பிள்ளைகள்கூட "பாலியல்" பேசும் கொடிய காலம்! அன்றும் இக்கொடிய செயல்கள் இருந்தபோதிலும், இன்று அந்த தீய - சக்கரம் பன்மடங்கு வேகமாக சுழலத் துவங்கிவிட்டது!*

*ஒரு காலத்தில் "பிரமாணங்களே ஒரு தேசத்தை கட்டி எழுப்புகிறது!" என்ற பொன்மொழிகள் மாறி, "பிரமாணங்களைக் கண்டும் காணாமல் ஒதுக்குவதே, இன்றைய வாழ்விற்கு ஏற்புடையது!" என்ற கதியாகிவிட்டது.*

*ஆம், இன்றைய அனைத்து "தாராளமயமான செயல்களுக்குப்" பின்னால் ஒழிந்திக்கும் ஆவி என்னவெனில் "பிரமாணங்கள் வேண்டாம்!" என்ற ஆவியே ஆகும்! இவர்களின் அதிகார பூர்வமான இலக்கு என்னவெனில் "***தாங்கள் விரும்பியதை நிறைவேற்ற வேண்டும்!***" என்ற ஒரே உள்நோக்கம்தான்! இதையெல்லாம் சகித்துக்கொண்டு, அவைகளை தங்கள் சபைகளில் அனுமதிக்கும் கிறிஸ்தவ தலைவர்களும் உண்டு! கேவலம் ஆட்கொண்ட, கோழைத் தலைவர்கள்!*

*"பிரமாணங்களை கண்டும் காணாமல் ஒதுக்கும்...." இந்தக் கொடிய ஆவி, நம் கிறிஸ்தவப் பிள்ளைகளை ஆட்கொண்டு, அவர்களின்*

பெற்றோர்களுக்கு கீழ்ப்படிவதையும், அடங்கியிருத்தலையும் புறக்கணிக்கும் தீய காலமாய் மாறிவிட்டது! கேட்டால், "பிரமாணம் ஒரு பரிசேயத்துவம்..... நாங்கள் வேண்டுவது ஜனநாயகம்!" என கொக்கரிக்கத் துவங்கிவிட்டார்கள்!

**"சுயாதீனம்" வேண்டுமா? ஆம், நிச்சயம் வேண்டும்! ஆனால், இவ்வாறு "பிரமாணங்களைத் தூக்கி எறிந்துவிட்டு" சுய -வழி இச்சைகளை நிறைவேற்றவதற்கல்ல இந்த சுயாதீனம்! வேதபூர்வ திசையையே மாற்றும் கொடிய சுயாதீனம் இவர்களுக்கு ஒரு கேடா!**

ஒன்றில் துவங்கும் இவர்கள்..... ஒன்றன்பின் ஒன்றாய் "பிரமாணத்துவத்தை" அவமதித்து "சுயாதீன" சுழல்காற்றில் தங்கள் மனம்போன போக்கில் தாறுமாறாய் போய் கொண்டிருக்கிறார்கள்!

இவ்வித "சுயாதீன" சுழலில் சுகம் கண்டவர்கள், தேவ வசனங்களையும் அது வழங்கும் பிரமாணங்களையும் 'மித மிஞ்சியது' என எண்ணத் துவங்கிவிட்டார்கள்! தேவ பிரமாணம் இருப்பதால் தானே ஒரு "குற்ற மனசாட்சி" உருவாகிறது! இப்படியெல்லாம் "ஓர் சுத்த மனசாட்சியின் வாழ்விற்கு" பிரயாசப்படுவதெல்லாம் அவசியம்தானா? என்றெல்லாம் உள்ளத்தில் அலைகழிக்கப்பட்டு, முடிவில் தங்கள் இருதயத்தை கடினப்படுத்தி, **தங்கள் மனசாட்சியின் தொந்தரவை கொன்றுவிடுகிறார்கள்!** யார் இவர்கள்? தங்கள் இச்சையின் போக்கில் செல்ல விரும்பிய சுக - ஜீவிகள்! வேறு யாரும் அல்ல.... இவர்களே அந்தி கிறிஸ்துக்கள்! ஏனெனில் அந்திக்கிறிஸ்துவின் மறுபெயரே "பிரமாணம் ஏதும் இல்லாதவன்!" என்பதுதான்.

கேளுங்கள்: "வேதத்தில் உள்ள அனைத்து ஆவியின் ஜீவ பிரமாணங்களுக்கும் பெருமகிழ்ச்சியுடன் கீழ்ப்படிந்து, அதை மனதார விசுவாசித்து, நெஞ்சார அன்புகூர்ந்து அனைத்தையும் கொள்ளைப் பொருளாய் கண்டடைந்து வாழுங்கள்!" அல்லேலூயா.

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

---

## எனக்கு ஏன் நடந்தது? என்ற கேள்வி, விசுவாசத்தை பறித்திடும்!

*'தேவன் மீது கோபத்தால்' பாதிக்கப்படுவோர், அனேகர்*

பிரிவினை கொண்ட வீடு! சரீர சுகவீனம்! காதல் தோல்வி! வேலை இழப்பு! இதுபோன்ற 'ஏமாற்றங்களை' ஏராளமாய் இந்த உலகத்தில் காண்கிறோம். இதை அடிப்படையாகக் கொண்டே "பல்வேறு சந்தேகத்தின் நோயால்" பெரும்பாலான ஜனங்கள்

பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்! இதுபோன்ற தோல்வியை தன் வாழ்வில் அதிகமாய் சந்தித்தவர்தான் *ரிச்சர்ட்* என்ற சகோதரன்! இவர் ஒரு வேத போதகனாய் இருந்தார், *யோபுவைக்* குறித்த வேதபாடங்களையும் அச்சிட்டு வெளியிட்டார். ஆகிலும், தன் வாழ்வில் ஏற்பட்ட சோகங்களைப் போக்குவதற்காகவே ஒரு போதகனாய் போதித்து, புத்தகங்கள் எழுதி, 'தேவன் மீதுகொண்ட சந்தேகங்களை' நீக்கிவிட பலமாய் முயற்சித்தார்!

இவ்வாறாக அவர் செய்த அனைத்து முயற்சியும் தோல்வியுற்று, முடிவில் "தேவன் ஒருவர் இருந்தால், அவர் ஏன் ஒரு பொம்மையைப் போல் என்னை ஆட்டி வைக்கிறார்? இதுபோன்ற பொறுப்பற்ற தன்மையை நிறுத்திவிட்டு, தன்னை அவர் என்னிடத்தில் வெளிப்படுத்தியிருக்கலாமே?" என்ற கேள்வியோடு தேங்கி நின்றுவிட்டார்.

அந்த சகோதரனை விசாரித்த *பிலிப்பு யான்ஸியாகிய* நான், சற்று கலக்கமடைந்தாலும், பின்பு **என் விசுவாசத்தை** நிலைப்படுத்திக்கொண்டேன்.

> **"எப்படியெனில் இந்த *ரிச்சர்ட்* சகோதரன் "தான் வஞ்சிக்கப்பட்டதான உணர்வுகளை மாத்திரம் பெற்றுவிட்டு, விசுவாசத்திற்குரிய சத்தியங்கள் அனைத்தையும் விட்டுவிட்டதைக் கண்டு" நான் வருந்தினேன்.**

ஆனால், இது குறித்து நான் அதிகமாக சிந்தித்தபோது, இந்த *ரிச்சர்ட்* சகோதரன் பெற்றிருந்த 3 கேள்விகள், இன்று வாழும் விசுவாசிகள் பெரும்பாலோரிடத்தில் இருப்பதைக் கண்டேன். *ரிச்சர்டைப்* போல் சிலர் வாய்விட்டு கேட்கிறார்கள்! ஆனால் அநேகர் அவ்வாறு கேள்விகேட்பது விசுவாச பிரமாணத்திற்கு எதிர்ப்பாய் மாறிவிடுமோ என்று 'பிறர் அபிப்பிராயத்திற்கு' அஞ்சுகிறார்கள்!

*ரிச்சர்ட்* சகோதரனிடத்தில் குமுறிய அந்த மூன்று கேள்விகள்:

**1) தேவன் பாரபட்சம் காட்டுபவரா**? இந்த சகோதரன், தேவனைத் தொடர்ந்து பின்பற்ற முயற்சித்தாலும், அவருடைய ஜீவிய துன்ப நிகழ்ச்சிகளோ வேதம் வாக்குக்கொடுத்த வாக்குதத்தங்களுக்கும், மகிழ்ச்சிக்கும் விரோதமாய் இருப்பதாக எண்ணிக்கொண்டார். தன்போன்றவர்களைவிட "தேவன் ஒருவர் இல்லை" என வாதிடும் ஜனங்கள் செழித்து வாழ்வது எப்படி?

இதுபோன்ற முறையீடுகள் *யோபு* புத்தகத்திலும் சங்கீத புத்தகத்திலும் திரும்ப திரும்ப எழுப்பப்பட்டாலும் 'அது'

*விசுவாசத்திற்கு இடறல் தருகிறதாய் இருக்கிறதல்லவா?*

**2) தேவன் மௌனம் சாதிப்பவரா?** *இந்த ரிச்சர்ட் சகோதரன் தன் கல்வி சம்பந்தமாயும், உத்தியோக சம்பந்தமாயும், வாழ்க்கை துணை தேடும் சம்பந்தமாயும் பல்வேறு குறுக்கு சாலைகளை சந்தித்து "தேவனே, நீர் நடத்தும் பாதையை தெளிவாய் காண்பியும்" என கேட்டு 'இது தான் தேவ சித்தம்' என மனதளவில் தெரிந்து கொண்டு, முடிவில் தோல்வியில் முற்றுபெற்றது!*

*இந்த சகோதரன் என்ன கேட்கிறார் தெரியுமா? "இந்த பரம தகப்பன் நாம் வழி தவறி விழுவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறாரோ?" தேவன் என்மேல் அன்பாயிருக்கிறார்! என்றும், என் ஜீவியத்திற்கு ஆச்சரியமான வரைபடத்தை வைத்திருக்கிறார்! என்றும், நான் போதிக்கப்பட்டிருந்தேன். மிக்க நல்லதுதான், ஆனால் எனக்கென்று வைத்திருக்கும் அவரது திட்டத்தை என்னிடம் ஏன் சொல்லவில்லை? ஏன், சொல்லாமல் மௌனம் சாதிக்கிறார்? என பல கேள்விகள் எனக்குத் தோன்றின என கூறியிருந்தார்!*

**3) தேவன் ஒளிந்து கொண்டாரா?** *இந்த கேள்விதான், ரிச்சர்ட் சகோதரனை கோபக்காரனாய் மாற்றியது. இத்தனை நடந்துவிட்ட சமயங்களில் 'தேவன் தன்னை' வெளிப்படுத்தி நிரூபித்திருக்க வேண்டுமல்லவா? அவரை உண்மையாய் தேடுகிற ஜனங்களுக்கும், தேவன் தன்னை ஒளித்துக்கொள்வதைப்போல் தோன்றுகிறதே?*

> **"இவ்வாறாக, ஒருநாள் இரவில் தோன்றிய கேள்விகளுக்கு, உடனே பதில் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக இந்த *ரிச்சர்ட்* சகோதரன் தேவனை விட்டே விலகி விட்டார்! அது துயரம்.**

*ரிச்சர்ட் அப்படியிருந்தாலும், இந்த மூன்று கேள்விகளும் பெரும்பாலான கிறிஸ்தவர்களிடத்தில் இருக்கிறதே? என நான் பாரத்துடன் சிந்தித்த நேரத்தில், ஒரு மிஷனரி நண்பனுக்கு ஏற்பட்ட சம்பவம் என் நினைவிற்கு வந்தது. தென் அமெரிக்காவில் உள்ள 'பெரு'* (PERU) *என்ற தேசத்தில் உள்ள மிஷனரி "சிப்பிபோ" என்ற* **மிகச் சிறிய மலைஜாதி கிராமத்திற்கு மிஷனரியாக** *சில ஆண்டுகளுக்கு முன்பாக அனுப்பப்பட்டிருந்தார்! அந்த மிஷனரி, தன் ஊழிய பாதையில் சந்தித்த துன்பம், அவரை கலங்கச் செய்தது! அதில் உழன்று, நோயுற்று, மீண்டும் அமெரிக்கா திரும்பிவிட்டார்.*

*அவர் மிஷனரி பணியாற்றிய அந்த ஸ்தலத்திற்கு ஓர் புதிய மிஷனரி அனுப்பட்டு, அந்த ஊழியத்தை அவர் தொடர்ந்தார்! ஒரு மிதவை குட்டி விமானத்தில் பயணமாய் தீவுக்குத் திரும்பிய அந்த*

புதிய மிஷனரியை நான்தான் அந்த தீவுக்கு விமானத்தை ஓட்டி கூட்டி வந்தேன்! முன்பிருந்த மிஷனரி ஊழியம் செய்து உருவாக்கிய ஒரு சிறிய சபைக்கு என்னை அழைத்துச் சென்றார். ஒத்ததையடி காட்டுப் பாதைதான் அந்த ஊருக்கு பிரதான சாலையாய் இருந்தது! கரடுமுரடான பாதையைத் தாண்டி, சில டஜன் குடிசை வீடுகளைக் கொண்ட மக்கள் மத்தியில் என்னை அழைத்துச் சென்றார். அவர்கள் மத்தியில் தேவன் எழுப்பிய ஒரு சபை வளாகத்தையும் எனக்கு காண்பித்தார். ஊழிய முதற் காலத்தில், அந்த சபை உருவாவதற்கு காரணமாயிருந்த அந்த இளம் மிஷனரியைப் பற்றிய சோக சரித்திரத்தை, இப்போது பொறுப்பேற்ற மிஷனரி என்னிடம் கூறினார்:

*உழைத்து ஊழியம் செய்த அந்த ஆரம்ப நாட்களில் தன் ஆறுமாத குழந்தை வாந்தி பேதியினால் மரித்துவிட்ட சம்பவம் அந்த இளம் மிஷனரியின் மனதை உடைத்துவிட்டது. இவைகளை எனக்குச் சொல்லிய 'பெரு' நாட்டு புதிய மிஷனரி சகோதரன் தொடர்ந்து கூறுகையில், தன் மகனை இழந்த அந்த மிஷனரி, தன் கையால் மகனைப் புதைத்து கல்லறை அருகில் ஒரு செடியை நாட்டினார்.*

*தினசரி சென்று அந்த செடிக்கு தண்ணீர் ஊற்றுவார்! சில சமயம் அழுவார்! சில சமயம் ஜெபிப்பார்! சில சமயம் விரக்தியோடு கல்லறையை சோகமுடன் பார்த்து கொண்டு நிற்பார்! அந்த சிறு மலை ஜாதி சபை மக்களும், அவரது சொந்த மனைவியும் அவருக்கு ஆறுதல் சொல்ல எவ்வளவோ முயற்சித்தும் பயன்இல்லாமல் போய்விட்டது!*

முடிவாக, அந்த இளம் மிஷனரி தொடர்ச்சியான பேதியினால் கஷ்டப்பட்டு சொந்த ஊர் '*லிமாவிற்கு*' அழைத்துச் செல்லப்பட்டார். ஒரு மருந்து கூட அவரை குணப்படுத்த முடியவில்லை. முடிவாக '*இசிப்பு பேதி*' தாக்கியதாக கூறி, பூரண சுகம் பெற அமெரிக்கா ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்கள். "HYSTRICAL DIARRHEA" - 'இசிப்பு பேதி' அதை விளக்கிச் சொன்ன மருத்துவர் "**தெய்வத்தின் மீது கோபத்தால் ஏற்பட்ட மனநோய்**" என விளக்கினார்!

இச்சமயத்தில், அந்த வாலிப மிஷனரி சகோதரனின் ஸ்தானத்தில் '*பிலிப்பு யான்ஸியாகிய*' என்னை வைத்துப் பார்த்தேன். அன்று *ரிச்சர்ட்* எழுப்பிய மூன்று கேள்விகள் என் மனதில் ஞாபகத்திற்கு வந்தது. மேலும் இந்த இளம் மிஷனரி, தன் மகன் கல்லறைக்கு முன்பாக நின்றபோது, என்ன ஜெபித்திருப்பார்? என்றும் யோசித்துப் பார்த்தேன். அன்று *ரிச்சர்ட்* கூறிய 'இவ்வாறு நடந்தது நியாயமில்லை' என்றே அவரும் தன் மனதில் கூறியிருக்கக்கூடும். மேலும் 1) என் குழந்தை என்ன

தவறு செய்தது. 2) தேவனுக்கு ஊழியம் செய்யத்தானே ஓர் மிஷனரி குடும்பமாய் வந்தோம், அதற்கு இதுதான் கிடைத்த பரிசா? 3) ஓர் ஆறுதல் வார்த்தையை தேவன் பேசியிருக்கக்கூடாதா? அவர் சமூகம் என் கூடவேயிருப்பதை ஒரு அடையாளமாய் காட்டியிருக்கக்கூடாதா? ஆனால், எதுவும் நடக்கவில்லையே! இவ்வாறு தேவனுடைய இரக்கத்தை நம்ப முடியாத கேள்விக்குறி, அந்த இளம் மிஷனரியின் மனதைப் பாதித்து, 'இசிப்பு' என்ற, தேவனை கோபித்துக் கொண்ட மன நோய்க்குள் அவரைத் தள்ளிவிட்டது!

*ஓர் நாத்திகன் தேவனிடத்தில் ஏமாந்துபோவதில்லை. அது ஏனென்றால், அவர்கள் தேவனிடத்தில் எதையும் எதிர்பார்ப்பதில்லை, எதையும் பெற்றுக்கொள்வதுமில்லை! ஆனால் தங்களை ஜீவனுள்ள தேவனுடைய கரத்தில் அர்ப்பணித்தவர்கள், தங்களையும் அறியாமல் நன்மையான ஈவுகளை அவரிடமிருந்து எதிர்பார்ப்பதில் தவறு ஒன்றுமில்லையே? இதன்பிறகு, பல காலமாய் நான் அந்த ரிச்சர்ட் சகோதரனை காண முடியவில்லை. ஆகிலும், நான் அந்த சகோதரனுக்காக ஜெபிப்பதை நிறுத்திவிடவில்லை. எங்கேயாவது அவரை சந்தித்து, அவரது படுகுழியிலிருந்து தூக்கிவிடலாமா? என்று முயற்சி செய்தேன்!*

ஆனால், என்னுடைய முயற்சி அனைத்தும் வீணாகிப் போனது. *ரிச்சர்ட்* எழுதிய "யோபுவின் ஆராய்ச்சி களஞ்சியம்" என்ற புத்தகத்தை, *ரிச்சர்ட்* கேட்டுக் கொண்டதினிமித்தம், அந்த பதிப்பாசிரியர் ஒரு பிரதி எனக்கு அனுப்பி வைத்தார்! அவ்வளவு பெரிய புத்தகத்தைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன். சோகம் என்னவெனில், அந்தப் புத்தகத்தை எழுதிய ஆசிரியர் *ரிச்சர்ட்* சகோதரன் **யோபு கொண்டிருந்த விசுவாசத்திற்கு** தூரமாகிப் போனார்! அந்த புத்தகத்தை நான் காணும் போதெல்லாம் ஓர் மிகப்பெரிய எச்சரிக்கை என் உள்ளத்தில் தொனித்தது:

"

**அதுஎன்னவெனில், ஆவிக்குரிய உயர் ஜீவியத்தையோ அல்லது தெய்வ விசுவாசத்தையோ போன்ற விஷயங்களை ஒருவன் எழுதும்போது, புத்தக வெளியீட்டிற்காக 'அவசரமாய்' எழுதுவது மிகப்பெரிய தவறு என்ற பாடத்தைக் கற்றுக்கொண்டேன்! எத்தனையோ புத்தக ஆசிரியரின் நிலைமை அப்படித்தான் இருக்கிறதோ? என எண்ணி வியக்கிறேன்!**

இனிவரும் காலங்களில், ஒரு புத்தக சாலைக்கு சென்றால், அது தலைப்பு பார்த்து, புத்தகத்தை தேர்ந்தெடுக்காமல், அதை

*எழுதியவர் வாழ்ந்து காட்டிய ஜீவயம் உடையவரா? என்பதை காண நானும் அறிவுறுத்தப்பட்டேன்! நாம் எல்லோருமே அந்த ஜாக்கிரதை கொண்டவர்களாய் வாழ்ந்திடுவோமாக!*

*- பிலிப்பு யான்ஸி (USA)*

---

## ஆவிக்குரிய செழிப்பை உண்டாக்கும் 'பிரசங்கமே' இன்று தேவை!

*'தன்னண்டை ஈர்க்கும்' பிரசங்கிகள், கிறிஸ்துவின் விரோதிகள்*

பெந்தெகொஸ்தே நாளில் பிறந்த சபை! அப்போஸ்தலனாகிய பவுல் மற்றும் பிற அப்போஸ்தலர்களின் உபதேசங்கள் மூலமாய் உருவான சபை! **தேவத்துவத்தை தலைமையாகக் கொண்டு** இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களில் கட்டப்படும் சபை! மறுஜென்மம் பெற்ற சபை! ஆம்.... இந்த சீரான சபைதான் இன்று பாதிக்கப்பட்டு நிந்தைக்குள்ளாகி இருக்கிறது!

"தேவனுடைய சபையை பாதாளத்தின் வாசல்களும் மேற்கொள்ள முடியாது! தேவனே எல்லாம் பார்த்துக் கொள்வார்" என மத்.**16:18**-ம் வசனத்தை எளிதாக கூறிவிட்டுச் சென்றுவிடாதீர்கள்! தன் பணியை நிறைவேற்ற தேவன் தன் சொந்த ஜனத்தையே பயன்படுத்துகிறார்!

> "**சபையின் நிலை கண்டு, தூதர்கள் அழலாம்.... ஆனால், தன் பணிக்கு அவர்களை அவர் அனுப்ப மாட்டார்! தூய சபைக்கு ஏற்பட்டுவிட்ட தீழ்ப்புக்காக அழும் பாரம்கொண்ட, இருதயம் நொறுங்குண்ட புருஷர்களையும், ஸ்திரீகளையுமே தேவன் அன்றும் இன்றும் பயன்படுத்துகிறார்!**

இன்று தேவனுடைய சபைக்கு ஏற்பட்டுவிட்ட கேடான தீழ்ப்புகளில், "**செழிப்பான சுவிசேஷம்**" என்பதே பிரதானமாகும்! இந்த மாறுபாடான சுவிசேஷம் *சீனா, ஆப்பிரிக்கா,* தொடங்கி உலகின் எல்லா கண்டங்களுக்கும் விஷம்போல் பரவி, சபைகளைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறது! இந்த சுவிசேஷம் பரத்திலிருந்து தோன்றியதா? இல்லவே இல்லை! பணக்கார அமெரிக்க சுவிசேஷகர்களாலும், பொருளாசை கொண்ட அமெரிக்க பாஸ்டர்களாலும் கண்டுபிடிக்கப்பட்டதே இந்த செழிப்பான சுவிசேஷம்!

இக்கேடான அவபக்தியான சுவிசேஷத்தைக் கேட்டு, அதில் தங்கள் மனதை செலுத்தியவர்களுக்கு **கிறிஸ்துவின் தூய சுவிசேஷம்** கடுகளவுகூட மனதில் ஏறாது! அவர்கள் இருதயம், செழிப்பின் சுவிசேஷ இச்சையினால் கேடகம்போல் சூழப்பட்டிருக்கிறபடியால், அவர்களின் இருதயம் கடினம் கொண்டிருக்கிறது! வேதம் உரைக்கும்

செம்மையான நீதியின் வசனங்களை, இதுபோன்ற கடின இருதயம் கொண்டவர்களிடம் பேசுவதுகூட கடினம்!

*ஒரு செழிப்பு உபதேச பிரசங்கி இவ்வாறு பிரசங்கித்தார்: "முதலாவது உங்கள் வாழ்வில் பணம் நதிபோல் புரண்டு ஓட வேண்டும்! அப்படி இல்லையென்றால், செழிப்பில்லாத உங்களிடம் பரிசுத்தாவியானவரின் நதி ஒருபோதும் ஊற்றப்படாது....." இதெல்லாம் என்ன? மேடையில் பிரசங்கி படமெடுத்து பாம்பின் தலையாய் ஆடுகிறார்! கீழே ஜனங்கள், அதற்கு துவண்டு விழும் புழுக்களாய் நெளிந்து கொண்டிருக்கிறார்கள்! ஆம், இன்று இதுவே தூய சபைக்கு ஏற்பட்டுவிட்ட நிந்தைகள்! இவர்களை ஏசாயா தீர்க்கதரிசி "பேராசை கொண்ட நாய்கள் என்றும், உண்மையற்ற காவலாளிகள்" என்றுமே சாடுகிறார். எரேமியா சாடுகையில் "என் ஜனம் வழி தப்பிப்போன ஆடுகளாய் இருக்கிறார்கள்" என்றே கூறினார்!*

இவ்வித சத்தியவிரோத போதகர்கள், ஆத்துமாக்களை விசாரிக்காமல்..... பணத்தின் பின்னால் சேவிக்கும் பணப் - பிசாசுக்கு சிக்குண்ட அடிமைகள்! இதோ, கர்த்தர் விரைந்து வருகிறார்..... நிச்சயமாய் நியாயம் விசாரிப்பார்! தேவனோ, எச்சரித்து கூக்குரலிட்டு: "கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நான் என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்: மேய்ப்பன் இல்லாததினால் என் ஆடுகள் சூறையாகி, என் ஆடுகள் காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாய் போயின! மேலும்,

**"என் மேய்ப்பர்கள் என் ஆடுகளை விசாரியாமற் போனார்கள். மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்த்தார்கள்!**

ஆகையால் மேய்ப்பரே, ஆண்டவர் சொல்லுகிறார்: இதோ, நான் மேய்ப்பருக்கு விரோதமாக வந்து, என் ஆடுகளை அவர்கள் கையிலே கேட்டு, மேய்ப்பர் இனியும் தங்களையே மேய்க்காதபடி, மந்தையை மேய்க்கும் பணியைவிட்டு அவர்களை விலக்கி, என் ஆடுகள் அவர்களுக்கு ஆகாரமாயிராதபடி, அவைகளை அவர்கள் வாய்க்குத் தப்பப் பண்ணுவேன்! என்று சொல்லு" (எசே.34:8-10) என முழங்கினார்!

பரிசுத்தாவியின் கிரியை, இந்த உலகத்திற்குத் தவறான முறையில் காட்டப்படுவது, இன்றுள்ள கிறிஸ்துவின் சபைக்கு ஏற்பட்ட மகா துயரமான நிந்தையாயிருக்கிறது. இவ்வாறு பரிசுத்தாவியானவரின் தூய்மை, தேவ தூஷணத்திற்குள்ளாவதை ஏராளமான சிறந்த

*பாஸ்டர்கள்கூட கண்டு கொள்ளாததைப்போல் இருக்கிறார்கள்!*

> **"ஆட்டு மந்தையைப் போல் நிற்கும் ஜனங்களும், கடுகளவுகூட பகுத்தறியும் உணர்வற்று இழந்து நிற்கிறார்கள். கூட்டம் சேரும் சபைக்கு இவர்களும் சேர்ந்து, ஆயிரக்கணக்கில் செல்கிறார்கள்! அங்கே மேடையில் சில துணிகர பாஸ்டர்கள் பரிசுத்த ஆவியை தவறாய் பயன்படுத்திக் காண்பிக்க..... இவர்களோ, யாதொன்றும் பகுத்தறிய அறியாமல் கரங்களை உற்சாகமாய் தட்டி, பரவசமாய் தேவனைத் துதித்துக் கொண்டிருக்கிறார்கள்!**

*"பரிசுத்தாவியின் எழுப்புதல்" என்ற பெயரில் 'தன்னடக்கம் இல்லாமல்' உடம்பைக் குலுக்குவதும், தரையில் உருளுவதும், அரைப் பைத்தியம் போல் சிரிப்பதும், குடிகாரர்களைப்போல் அங்குமிங்கும் தள்ளாடுவதும், பாம்புகளைப்போல் உடம்பை நெளித்து நிற்பதும், காட்டு மிருகங்களைப்போல் ஊளையிடுவதும்..... பாஸ்டர்கள் மேடையில் எழுந்து நின்று ஜனங்களிடத்தில் 'பரிசுத்தாவியின் அபிஷேகத்தை ஊதுவதைப்போல் ஊதி' ஜெபம் என்ற பெயரில் ஜனங்களைக் கீழே தள்ளுவதும்.... தன் கோட்டுச் சட்டையை நாலா பக்கமும் சுழற்றி "கர்த்தருடைய கரம்" உங்கள்மேல் வந்துவிட்டது எனக்கூறி ஜனங்களை தள்ளாட வைத்து அசர வைப்பதும்..... இதுதானே இன்று ஜனங்கள் காணும் எழுப்புதல்!*

> *இவர்கள் கூறும் யாதொன்றும் வேதப்புத்தகத்தில் இல்லையென்றால் அவைகளை தேவ வைராக்கியத்தோடு எதிர்த்து நிற்க வேண்டியது உங்கள் மேல் விழுந்த தேவகட்டளை என்பதை அறிந்து கொள்ளுங்கள். நானோ, ஆத்துமாக்களின் மீது அக்கறை கொண்டவன்! அவர்களின் குருட்டுத் தன்மைக்காய் வேதனை அடைபவன்! ஆகவே அவர்களைப் பார்த்து "தேவனுடைய பரிசுத்த சபைக்கு" ஏற்பட்டுவிட்ட நிந்தையைப் பாருங்கள் என எச்சரிப்பு விடுக்கும் அழைப்பையும் தேவனிடமிருந்து பெற்றவன்!*

*அதோடு மாத்திரமல்லாமல், இப்போது நான் உங்களோடு பேசிய அனைத்தும்* **வேதபூர்வமான சத்தியத்தின் ஆதாரம்தான்** *என்பதை நீங்கள் உணர்ந்தவர்களாயிருந்தால், "இந்த தாறுமாறு உபதேச புத்தகங்கள் அனைத்தையும் உங்கள் புத்தக அடுக்கிலிருந்து பிரித்தெடுத்து, அதை வேறு யாருக்கும் தந்துவிடாமல், அனைத்தையும் தீ வைத்து கொளுத்துங்கள்!" என்றே, அறிவுரை கூறுவேன்!*

*'வசந்தமான பரிசுத்தம்' என் வாழ்வில் இழந்து வாடிவிட நான் விரும்பவில்லை! நல்ல விசுவாசிகள் வாடுவதையும் நான்*

*விரும்பவில்லை! நான் வளர்ச்சியடைய வகை செய்யும்* **தூய்மையான கர்த்தருடைய வசனங்கள்** *எனக்குப்போதும்! அதுவே உங்கள் யாவருக்கும் உரித்தாகட்டும்! ஆமென்.*

*- டேவிட் வில்கர்ஸன் (USA)*

---

## இரட்சகர் பிறப்பில் 'தூதர்களின் பணிவிடை' ஓர் குதூகலம்!

*மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரை, பரலோகம் கொண்டாடியது*

**கி**றிஸ்து பிறந்தவுடனே 'நீண்டகால இடைவெளிக்குப்பிறகு' இந்த பூமியில், தேவ தூதர்களுக்குள் குதூகலமான பணி தொடங்கியது! அது, ஆண்டவர் நாத்தான்வேலுக்குச் சொன்னதுபோலவே ஆயிற்று. "தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் இதுமுதல் காண்பீர்கள் என்றார்". கிறிஸ்துவின் பிறப்பினிமித்தம், பரலோக தூதர்கள், எப்படியெல்லாம் உற்சாகமான கோலாகல ஊழியத்தைச் செய்தார்களென காண்கிறோம்.

> **கா***பிரியேல் என்னும் தேவதூதன் தேவாலயத்தில் சகரியாவுக்குத் தோன்றி யோவானுடைய பிறப்பைக் குறித்து அறிவித்தான்! அதற்குப்பின், மரியாள் வீட்டுக்குப்போய் பிறக்கப்போகிற அதிசய நாதனைக் குறித்து பக்தி விநயத்துடன் அறிவித்தான்! யோசேப்பு, மரியாளை குறித்துச் சந்தேகித்துக்கொண்டிருக்கையில், தேவதூதன் அவருக்குத்தோன்றி: பிள்ளை பரிசுத்த ஆவியினால் உற்பத்தியாயிருக்கிறதென்றும், அவருக்கு இயேசு என்று பெயரிட வேண்டுமென்றும் சொன்னான்!*

குழந்தை பிறந்தவுடனே, ஒரு தூதன் வயல்வெளியில் மேய்ப்பர்களுக்குத் தோன்றி: எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன், இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் **உங்களுக்காக** தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்! என்று அறிவித்தான். இதற்குள்ளாகப் பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே மகிழ்வுடன் தோன்றி: "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்று ஆரவாரித்துப் பாடினார்கள்!

> "**கொஞ்சநேரம் பூலோகமே பரலோகம் போலாயிற்று! பரலோகநாதன் பூலோகத்துக்கு வந்தபோது பூலோகம் ஏன் பரலோகமாகாது?**

எபிரெயர் நிருபத்தில் சொல்லியிருக்கிறபடி "தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது,

தேவதூதர்கள் யாவரும் 'அவரைத்' தொழுதுகொள்ளக்கடவர்கள்" என்ற வாக்கியம் நிறைவேறியது! இவ்வாறாக, தேவராஜ்ஜியத்தின் கரைபுரண்ட மகிழ்ச்சியைப் பார்த்தீர்களா?

*மாட்டுத்தொழுவத்தில் பிறந்த குழந்தையை மனுஷர் பணிந்து கொள்ளாமற் போனாலும், அவருடைய தூதர் சேனைகள் தாழ இறங்கி வந்து பணியாமல் இருப்பார்களோ?*

**ஏரோது** பிள்ளையைக் கொல்ல எத்தனித்தபோது, தேவதூதன் *யோசேப்புக்குத்* தோன்றி, பிள்ளையையும் தாயையும் எகிப்துக்குக் கொண்டுபோகும்படி துரிதப்படுத்தினான்! ஆபத்து கடந்தபின்பு, தேவதூதன் மறுபடியும் *யோசேப்புக்கு* எகிப்தில் தோன்றி, சொந்ததேசம் திரும்பிப் போகும்படி சொன்னான்!

இவ்வாறு நெடுங்காலம் நின்றுபோன தேவதூதரின் ஊழியம், இக்குழந்தை பிறந்தவுடனே மறுபடியும் பூமியில் வெகு விமரிசையாய் தொடங்கினது! வனாந்தர சோதனை முடிந்தவுடனே தேவதூதர்கள் வந்து அவரைப் போஷித்தார்கள்! கெத்செமனேத் தோட்டத்தில் 'சோர்ந்துவிழவே' அவரைத் தூக்கிவிட ஓர் மானிட நாதியில்லாததால், ஒரு தேவதூதன் வந்து அவரைத் தாங்கி தேற்றினான்!

*ஒரு சமயம், ஒரு பக்தனைப் பார்த்து: தேவதூதர்களில் யாரைப் பார்க்க உமக்கு அதிகப்பிரியம்? என்று கேட்டபோது, அவர்: பராக்கிரமனான மிகாவேலையும் அல்ல, மரியாளுக்குத் தோன்றின காபிரியேலையும் அல்ல, என் இரட்சகர் சோர்வடைந்த நேரத்தில், தோட்டத்தில் தூக்கி நிறுத்தித் தேற்றின தூதனுக்கே,* ***மீட்கப்பட்ட கூட்டத்தார்*** *யாவரும் நன்றிபாராட்ட கடனாளிகளாயிருக்கிறார்கள் என்று சொன்னார்!*

அவர் உயிர்த்தெழுந்தபோது, தேவதூதர் அந்தக் கல்லறைக்கு வந்தார்கள்! அவர் பரத்துக்கு எழுந்தபோது, தேவதூதர்கள் தோன்றி சீஷரோடு பேசினார்கள்! அவர் உன்னதத்திற்குப்போய் பிதாவினால் மகிமையையும் கனத்தையும் அடைந்தபோது, தேவதூதர்கள் யாவரும் அவருடைய பாதம் பணிந்து மகா சத்தமிட்டு: "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்" என்று ஆர்ப்பரித்தார்கள்! அவர் திரும்ப வரப்போகும் இரண்டாம் வருகையில், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்கள் அவரோடு வந்து, பரிசுத்தவான்களை நாலா திசைகளிலுமிருந்து அவரிடத்தில் கூட்டிச்

சேர்ப்பார்கள்! இவ்வாறெல்லாம் 'தூதர்களின் குதூகலத்தை' உற்று நோக்கி ரசிக்கும் நம் யாவருக்கும், 'கிறிஸ்துமஸ் தினத்தில்' நெஞ்சம் கனலாகி, நன்றி மலரை அவர் பாதம் மகிழ்வுடன் சமர்ப்பணம் செய்து அவரைக் கொண்டாடுவோமாக! ஆமென்.

*- பரமானந்தம் ஐயர்*

## அழைக்கப்பட்ட ஊழியனும், வரங்களும் இணைந்து செயல்படும்!

*வரங்களில் போட்டி மனப்பான்மை மனுஷீக மடமை*

ஒரு பாரம்பரிய கிறிஸ்தவனாய் வளர்ந்த நான், என் மாணவப் பருவத்தில் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்று, கர்த்தருக்கு ஊழியங்களும் செய்தேன்! அக்காலங்களில் பாரம்பரிய சபைகளில் நான் பிரசங்கித்ததைப்போலவே, பெந்தெகொஸ்தே சபைகளிலும் பிரசங்கித்து வந்தேன்! ஆனால், மெய்யான 'ஆவிக்குரிய வரங்கள்' இந்த இருசாராரிடத்திலும் பயனற்று இருப்பதைக் கண்டு, அந்தக் குறைகளில் சிலவற்றையே இங்கு குறிப்பிடுகின்றேன்:

தேவப் பிள்ளைகள் எந்த சாரராய் இருந்தாலும், அவர்கள் ஆவிக்குரிய வரங்களைக் குறித்து அறியாமலிருப்பது பேரிழப்பு. ஏனெனில், இரட்சகர் இயேசுவை "அவர் கர்த்தர் (LORD) என அறிந்து தொழுதுகொள்ள" ஆவியானவரே உதவி செய்கிறார்! (1கொரி.12:3).

> "**தேவன் தம் சொந்த ஜனத்திடமும், தேவ மக்கள் தேவனிடத்திலும் பேசித் தொடர்புகொள்ள பரிசுத்த ஆவியானவரே உதவுகிறார். கர்த்தரை 'ஊமையான விக்கிரகம்' என்ற எண்ணத்தை மாற்றுவது நம் கடமையல்லவோ?**

பிதாவாகிய தேவன், கிறிஸ்துவின் மூலமாய் "அழைக்கப்பட்ட தாசர்களுக்கு, தமது செயல்பாட்டு" **ஊழியங்களை** வழங்கி கிரியை செய்கிறார்! **வரங்களையோ,** ஆவியானவர் மூலமாக வழங்கி கிரியை செய்கிறார். ஆகவே, ஊழியங்கள் தேவனது அதிகாரத்தையும், வரங்கள் அவரது வல்லமையையும் வெளிப்படுத்துகின்றன! (12:4-6).

வரங்கள், செயலாற்றவேண்டிய கிரியைகளுக்கும், ஊழியங்கள், அழைக்கப்பட்ட தேவ மனிதர்களுக்கும் உரியது! வரங்களின் செயல் திறனும், அழைக்கப்பட்ட மனிதரும், செயலாற்ற வேண்டிய முறைகளும் 'தங்களுக்குள்ளும் ஒன்றோடொன்றும்' தேவத்துவத்தின் திரித்துவ ஒருமைப்பாட்டின் அழகிய பாணியிலேயே, வேற்றுமையில் ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றன(12:4-6). நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட தேவ வசனத்திற்கு புகழ் உண்டாவதாக!

*ஆவியானவர் தமது வரங்களை விசுவாசிகள் அனைவர் மூலமாகவும் வெளிப்படுத்துகிறார் (12:7,11). மற்ற விசுவாசிகளுக்கும் ஊழியம் கடமையுண்டு! (12:7).*

*ஆவியின் வரங்கள் மூலமாகவே, ஆவிக்குரிய வெளிப்பாடு கிடைக்கிறது! அதாவது வரங்களின் மூலமாக, ஆவியானவரை கேட்கவும், காணவும், உணரவும் முடிகிறது (12:7-10). விசுவாச வரத்தை, அனைத்து வரங்களையும் இயக்கும் முக்கிய அடிப்படை வரமாகப் பொதுவாக்கினால், மற்ற எட்டு வரங்களும் நான்கு ஜோடிகளாக அமையும். அவையாவன: 1. ஞானத்தை போதிக்கும் வசனமும், அறிவை உணர்த்தும் வசனமும்; 2. குணமாக்கும் வரங்களும், அற்புதங்களைச் செய்யும் வரங்களும்; 3. தீர்க்கதரிசனமும் ஆவிகளைப் பகுத்தறிதலும்; 4. பற்பல பாஷைகளைப் பேசுதலும், வியாக்கியானம் பண்ணுதலும். இவை வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள வரிசையிலேயே உள்ளன, அவைகள் மாற்றியமைத்த வரிசையல்ல! (12:8-10).*

*"என்ன?" என்பதற்கு அறிவும், "எப்படி?" என்பதற்கு ஞானமும் பதில் தரும் (மத்.22:15-22; அப்.15:25-28). ஆனால், மனிதருக்குள் 'இன்று அதிகமாக விரும்பப்படும் வரங்கள் அற்புதங்களும் தெய்வீக சுகங்களே' என மாத்திரம் தேங்குவது சரிதானோ? (அப்.4:30).*

> **"1கொரிந்தியர் 12:8-11-ல் நான்கு முறை வலியுறுத்தப்படுவது "அதே ஆவியானவர்" என்பதுதான்! இதன் படிப்பினை என்னவென்றால், எல்லா வரங்களின் தன்மை அல்லது சாரம் ஒன்றே! எனவே மாம்ஷீகப் போட்டி முற்றிலும் மனுஷீகத்தின் மடமை!**

*தேவையான வரத்தையும், அதை வெளிப்படுத்த வேண்டிய நபரையும் ஆவியானவரே, தமது சித்தம் அல்லது விருப்பப்படி தெரிந்தெடுக்கிறார் (12:11).* **உற்சாகமும் கீழ்ப்படிதலுமுள்ளவனே** *பொதுவாகத் தெரிந்தெடுக்கப்படுகிறான் (14:12,37). அந்தந்த சூழ்நிலையின் குறிப்பான தேவைகளே, தகுதியான வரத்தைத் தீர்மானிக்கிறது! (14:19,26), ஆமென்.*

*- R.ஸ்டான்லி BYM*

---

## 'என் தேவன்' என்ற பந்தமே, வெற்றியின் இரகசியம்!

*கர்த்தரோடு உறவு, நமது வெற்றி*

நெருக்கத்தில் அவரை கூப்பிட்டு! பாவ மரணகண்ணி நம் ஆத்துமாவைச் சூழும் வேளையில் அபயமிட்டு! இவ்வாறாக என் குரல், கர்த்தரின் சந்நிதியில் எட்டுவதே, *வெற்றியின் ஆரம்ப இரகசியம்!* (சங்.18:6). இந்த ஆரம்பத்தை தொடர்ந்து, அன்று பேதுரு, கடலில்

மூழ்கிய 'இக்கட்டு நேரத்தில்' கூப்பிட்டு, அதை ஆண்டவர் கேட்டு, தன் கரம் நீட்டி தூக்கியெடுத்தாரே, **அந்த தெய்வ உறவே, நமது வெற்றியின் இரகசியம்!** அதுவே, பாவத்தின் மீது கண்டடையும் மெய்யான வெற்றி!" (மத்.14:30,31). பேதுருவுக்கு வாய்த்த வெற்றி, கர்த்தரால் வந்தது.... அவ்வளவுதான்!

*இந்த நெருங்கிய தெய்வ உறவின் பந்தம் ஏற்படாமல் 'பாவத்தின்மேல் வெற்றி' உபதேசங்களைக் கொண்டாடுவதில் பிரயோஜனம் ஏதும் இல்லை! அப்படி வீண் கொண்டாட்டம் செய்தவர்களில் 'பெரும்பாலோர்' ஆழ்கடலில் மூழ்கிப்போன ஜீவியங்களை உற்று நோக்கிப் பார்த்து, விழிப்படையுங்கள்!*

*நமக்கு இந்த பூமியில் வாழ்ந்து காண்பிக்க வந்த (to demonstrate) இயேசு, "தன்னை 'பாவ மரணத்திலிருந்து' இரட்சிக்க வல்லவரை நோக்கி, பலத்த சத்தமிட்டு விண்ணப்பம் செய்து, அவரின் தெய்வ பயத்தினிமித்தம் அவர் குரல் கேட்கப்பட்டது!" என்ற ஜெயத்தையே நம் யாவருக்கும் பிரதானமாய் முன்வைத்து வாழ்ந்து காண்பித்தார்! (எபிரெயர் 5:7).*

> "**நம் நெருக்கத்தில் கர்த்தரை கூப்பிட்டு, என் குரல் அவர் சந்நிதியில் எட்டுவதே, வெற்றியின் ஆரம்ப இரகசியம்! (சங்.18:6). அன்று பேதுருவுக்கு, அந்த ஆழ்கடல் அருகில் வந்து கைநீட்டி தூக்கிய இயேசுவின் கரம், இப்போது "உயரத்திலிருந்து" அவரது கைநீட்டி, என்னைப் பிடித்து, ஒவ்வொரு ஜலப்பிரவாகத்திலிருந்தும்** (Many Waters) **என்னை தூக்கிவிட்டார்! (சங்.18:16) என்பதல்லவோ, நமது வெற்றியின் பரவசம்!**

ஒரே ஒரு இரகசியம்! என்னவெனில், அன்று தாவீது கூறியதுபோல் "என் கன்மலை!" "என் கோட்டை" "என் இரட்சகர்..... என் தேவன்!" என்ற நெருங்கிய 'தெய்வ பந்தமே' அந்த மாபெரும் இரகசியம் (வச.2). இந்த இரகசியத்தின் வழி, நம் நடைமுறை வாழ்விற்கு எளிது! 'உபதேசக்காரர்களுக்கு' கடினம்! உங்களைத் தன் கிருபையின் பெலனால் இரட்சித்த **இரட்சகரை அன்புகூருங்கள்,** அவ்வளவுதான்! இதுவே அந்த முதல் வசனம்! (வச.1). அந்த தெய்வ உறவு தரும் வெற்றி எப்படி சம்பவிக்கும்? எப்படி நிறைவேறும்? "**அவர் என்னை அன்புகூர்ந்து**" என்னைத் தப்புவித்தார், என்ற 19-ம் வசனம்! அன்பார்ந்தவர்களே தெய்வ நேசத்தில் வளருங்கள், வெற்றிமேல் வெற்றி பெற்று, வாழுங்கள்! நேற்றும், இன்றும், என்றும் மாறாத வெற்றியில் வாழுங்கள்! ஆமென்.

- T.ரத்தினகுமார்

## "பாவ சஞ்சலத்தை நீக்கும் பிராண நண்பன்" பாடலை உலகிற்கு தந்த

# ஜோஸப் ஸ்கிரீவன் (அயர்லாந்து)



புகழ்பெற்ற பாடலான "WHAT A FRIEND WE HAVE IN JESUS!" (பாவ சஞ்சலம் நீக்கும் பிராண நண்பர்தான் உண்டே) என்ற ஆங்கிலப் பாடலை எழுதியவர் "ஜோஸப் ஸ்கிரீவன்" ஆவார். இந்தப் பாடலின் சரித்திர வாழ்க்கைப் பின்னணி மிகுந்த துயரத்தின் மத்தியில் உருவானதாகும்! ஸ்கிரீவன் 1819-ல், அயர்லாந்திலுள்ள சீப்பார்டிக் என்னும் இடத்தில் பிறந்தார். தான் பிறந்த ஊரிலேயே இளமை கல்வியை முடித்தார். பின்னர் டப்ளிஸ் நகரில் திரித்துவ கல்லூரியில் பட்டம் பெற்றார். சில காலத்திற்குள்ளாக, அவருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருமண நாளுக்கு முன்தினம், மணப்பென் குதிரையில் ஏறி ஒரு ஆற்றை கடக்க முயன்றபோது, தவறி விழுந்து ஆற்றுநீரில் மூழ்கி உயிரிழந்தார்! இதை ஆற்றின் மறுகரையில் நின்று பார்த்தும், காப்பாற்ற முடியாமல் திகைத்து நின்ற ஸ்கிரீவன் மிகவும் வேதனைப்பட்டார். அவரது மனநிலையும் பாதிக்கப்பட்டது!

மனநிலை பாதிக்கப்பட்ட நிலையிலும், தெய்வ பக்தி நிறைந்தவராகவும், பிறருக்காக வாழ்பவராகவும் விளங்கினார். தன்னிடம் இருந்த பணத்தை ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும் செலவு செய்தார்! அச்சமயம் ஒரு பெண்ணை மணக்க விரும்பினார். திருமண நாளும் குறிக்கப்பட்டது. திருமணத்திற்கு முன்பு, அந்த சபையில் சேர விரும்பிய மணப்பெண்ணுக்கு ஒரு ஏரியில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. தண்ணீர் மிகவும் குளிந்திருந்ததால் ஜலதோஷம் பிடித்தது. பின்னர் அதிக காய்ச்சல் வந்து, அவளும் மரித்துப்போனாள்! அந்த துக்க சஞ்சலத்தில் 1855-ல் ஒரு பாடலை எழுதினார். அந்த பாடல்தான் "பாவ சஞ்சலத்தை நீக்க பிராண நண்பர் தான் உண்டே! பாவ பாரம் தீர்ந்து போக மீட்பர் பாதம் தஞ்சமே! துன்பம் இன்பமாக மாறும் ஊக்கமான ஜெபத்தால்!" என்ற அருமையான பாடலை எழுதினார். இந்தப் பாடலுக்கு ஸ்கிரீவன் கொடுத்த தலைப்பு "இடைவிடாமல் ஜெபம் பண்ணுவோம்" என்பதுதான்! இந்தப் பாடலை பார்த்த அவரது நண்பர், இந்த பாடலை இயற்றியது யார்? என்று கேட்டார். அதற்கு ஸ்கிரீவன் "ஆண்டவரும் நானும் சேர்ந்து இயற்றினோம்" என்று தாழ்மையுடன் பதிலளித்தார். உலகிலுள்ள 4-இலட்சம் கிறிஸ்தவ பாடல்களில் மிகவும் விரும்பி பாடப்படும் பாடல் என புகழ்பெற்றது. தன் வாழ்வின் கடைசி நாட்களை சுகவீனம், வறுமை மற்றும் மன வியாகுலத்துடன் கழித்தார். இறுதியில் 1886-ம் ஆண்டு தமது 66-வது வயதில் ரைஸ்லேக் என்னும் ஊரில், ஒரு சிற்றாற்றில் தவறி விழுந்து, மூழ்கி மரித்து போனார். சஞ்சலமிக்க மன நோயாளியாய் இருந்தாலும், உலகமெங்கும் உள்ள மக்களுக்கு ஆறுதல் தரும் பாடலை அவர் எழுதினாரென்றால், தாலந்து படைத்த உங்களையும் கர்த்தர் இன்னும் மேன்மையாக எடுத்து பயன்படுத்த மாட்டாரா? கர்த்தருடைய கரத்தில் நம்மை அர்ப்பணிப்போம்! கர்த்தர் நம்முடைய வாழ்க்கையிலும் "சுவிசேஷ பணி மூலமாய்" பெரிய காரியங்கள் செய்வாராக! ஆமென்.

- நிரூபித்து வாழும் கிறிஸ்துவின் தாசர்கள்

## ஓ, வாலிபனே! "நித்திய ஒளிபெற்று" வாழ்வதே உன் மேன்மை!

இமாச்சல பிரதேசத்தில் "கொட்கார்" என்ற ஸ்தலத்தில் திடீரென்று மகிழ்ச்சி ஆரவாரம் ஏற்பட்டது! 'நம் சாது வந்து விட்டார்.... நம் சாது வந்து விட்டார்!' என்ற ஆரவாரம் காட்டுத் தீ போல் கொட்கார் ஸ்தலம் முழுவதும் பரவியது. இந்தச் செய்தி கேள்விப்பட்ட ஒரு கும்பல் ஆனந்த கூத்தாடி, கண்ணீர் வடித்தார்கள்! சாது சுந்தர்சிங் தங்கி இருந்த குகையை நோக்கி ஓடியவர்களில், கால் நொண்டி நொண்டி நடந்து சென்ற பெண் பிள்ளைகளும், பரட்டை தலையோடு மகிழ்ச்சியுடன் ஓடிய பையன்களும், கூட்டமாய் சென்ற குஷ்டரோகிகளும் அடங்குவர்! தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களும் ஆனந்தமாய் அவரைத் தேடி ஓடினார்கள். "எங்களுக்காக அல்லவோ சாது திரும்பி விட்டார்" என்ற மகிழ்ச்சிப் பெருக்கோடு, ஏதோ நித்திய கன்மலையை கண்டதுபோல் ஓடினார்கள்!

விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் சாது சுந்தர்சிங் அவர்களை சந்தித்த காலத்தில், அங்கிருந்த அனைவருமே மனம் திரும்பி இரட்சகரின் ஒளியை கண்டடைந்தார்கள். அவர் சந்தித்த சிறு பிள்ளைகள் எத்தனை பேரோ, அத்தனை பேர்களுடைய இருதயத்திலும் இயேசுவின் ஜீவனை சாதுசுந்தர்சிங் விதைத்தார்!

அந்நாட்களில், சாது அவர்களுக்கு C.F.ஆண்ட்ரூஸ் என்ற நெருங்கிய நண்பர் இருந்தார். அவர் சாது சுந்தர்சிங்கைப் பற்றிக் கூறும்போது: "சுந்தர்சிங் இமாச்சல் பட்டணத்தில் இருக்கும்போது, தன்னுடைய உபரி நேரத்தை பள்ளி வாலிப பையன்களோடு அதிகமாய் செலவழித்தார். இரவில் நீண்ட நேரமாய் இந்த வாலிப பையன்கள், கொட்காரில் அவர் தங்கி இருந்த குகைக்கு முன்பாக அமர்ந்து, சாது சுந்தர்சிங்கின் பிரகாசிக்கும் முகத்தை 'கண் இமைக்காமல்' உற்று நோக்கி, அவர் கூறுவதை பேரார்வத்துடன் கேட்பார்கள். அவருக்குள் இருந்த விசுவாச தைரியமும், துணிச்சலும் இந்த இளைஞர்களின் உள்ளத்தை கொள்ளை கொண்டது!" எனக் கூறினார்.

அன்பான வாலிபனே, 'நித்திய ஜீவிய ஒளியோடு' வாழ்வதே அர்த்தமுள்ள மகிழ்ச்சியான வாழ்க்கை! ஏனெனில், அதுவே உன்னையும் பிரகாசிக்கும்! உன்னைச் சுற்றியுள்ள மற்ற வாலிபர்களையும் பிரகாசிக்கச் செய்திடும்!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப QR பயன்படுத்தவும்

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**

maduraichristianfellowship@indianbk